Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.162/2021

Deposition of witness for: DW -1

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபிகண்ணன் | Father/Husband Name | : நவநீதன் |
| Age | : | Calling | : |
| Date | : 02.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 day of 04.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் நகை கடை வைத்துளேன். கடந்த 07.08.2021ம் தேதி மாலை 06.50 மணிக்கு நேதாஜி ரோட்டில் புதிதாக திறக்க உள்ள எனது நகை கடையில் நானும், எனது அக்கா மகனும் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது ஒத்தக்கடை போலீசார் டெம்போ வேனில் வந்து குற்றவாளி இருப்பதாகவும் என்னிடம் அவர்களை அடையாளம் காட்ட வேண்டும் என்று என்னையும், எனது அக்கா மகன் அஜித் குமாரையும் வழுக்கட்டாயமாக வேனில் அழைத்து சென்றார்கள். **( அந்த கடை திறப்பிற்கான அழைப்பிதழ் எமசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அவர்கள் என்னை சத்திரப்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு எனது கண் முன்னாடி குற்றவாளியான நாகராஜ்யை அடித்து துண்புறுத்தி 50,1/2 பவுன் நகையை என்னிடம் வாங்கியதாக சொல்ல சொன்னார்கள். என்னிடமிருந்து 2 செல்போன், 16 கிராம் செயின், 8 கிராம் கை செயின், 6 கிராம் மோதிரம், எனது அக்கா மகன் அஜித்குமாரிடமிருந்து 6 கிராம் மோதிரம், வாட்ச், கடை சாவி, ரூ.8200/- ரொக்க பணம் ஆகியவற்றை வாங்கி கொண்டார்கள்.

அதன்பின்னர் ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அரை நிர்வாணமாக என்னையும், எனது அக்கா மகனையும் உட்கார வைத்தார்கள். அவர்கள் எனது மாமாவான பிவிஆர். வாசுதேவனை அழைத்து அவரிடம் ரூ.50,1/2 பவுன் கேட்டார்கள். நான் ஒத்தக்கடை காவல் ஆய்வாளரிடம் நாகராஜ் என்பவர் 2,1/2 பவுன்

நகையை கொடுத்து 3 பவுன் நகை வாங்கி சென்றதாக சொன்னேன். அந்த 2,1/2 பவுன் நகையை கொடுத்துவிடுவதாக சொன்னேன். அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை, அவர்கள் 50,1/2 பவுன் கொடுத்தால்தான் விடுவதாக சொன்னார்கள், இல்லையெனில் பொய்யான வழக்கு போடுவதாக சொன்னார்கள்.

எனது அக்கா மகன் அஜித்குமாரை விடுவிப்பதற்கு 5 பவுன் நகை கேட்டார்கள். அவரது எதிர் காலம் பாதிக்கப்படும் எனும் நோக்கத்தில் போலீசாரிடம் 2 1/2 பவுன் நகை கொடுத்தேன். என் மீது 4 பொய் வழக்குகள் போலீசார் தாக்கல் செய்தார்கள். கடந்த 08.08.2021ம் தேதி மீண்டும் சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் என்னை அடித்து துண்புறுத்தி 50,1/2 பவுன் நகை கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்றார்கள். அதன்பின்னர் 10.08.2021ம் தேதி அதிகாலை 04.00 மணியளவில் மருத்துவமனைக்கு போலீசார் கை விளங்கு போட்டு அழைத்து சென்றார்கள். நான் அங்கு 3 நாட்கள் சட்டவிரோத காவல் அடைப்பில் இருந்தேன். 10.08.2021ம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு மாண்புமிகு மேலூர் நடுவர் நீதித் துறை நடுவர் முன்னாள் ஆஜர்படுத்தினார்கள். நான் அவரிடம் 3 நாட்கள் சட்ட விரோத காவலில் இருந்த விவரத்தை சொன்னேன். அவர் அதை பதிவு செய்து கொண்டார்கள். அதன்பின்னர் திருமங்கலம் கிளைச்சிறையில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்கள். பிணையிலிருந்து வந்த பின்னர் மேற்கூறிய 4 காவலர்கள் மீது மாநில மனித உரிமைகள் ஆணைத்தில் வழக்கு தொடர்ந்தேன். அவர்கள் அதை விசாரித்து எனக்கும், எனது அக்கா மகனுக்கும் ரூ.5 லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க சொல்லி உத்தரவிட்டார்கள். **(அந்த உத்தரவின் அசல் எமசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**